## மரவள்ளிக் கிழங்கின் விலை விவசாயிகளை மகிழ்விக்கும்

மரவள்ளிக் கிழங்கு, வெப்ப மண்டல பகுதிகளில் அரிசி மற்றும் மக்காச்சோளத்திற்கு அடுத்து மூன்றாவதாக பயிரிடப்படும் முக்கிய பயிராகும். உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத்தின் மதிப்பீட்டின் படி, 2015-ஆம் ஆண்டு உலகில் மரவள்ளிக்கிழங்கு 88 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. உலக உற்பத்தியில் நைஜீரியா (19.73 %) முதல் இடத்திலும் தொடர்ந்து தாய்லாந்து (11.63%), இந்தோனேஷியா (8.48 %), பிரேசில் (8.37%) மற்றும் பிற நாடுகள் (51.79 %) உள்ளன. வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் இரண்டாவது முன்கூட்டிய அறிவிப்பின் படி, இந்தியாவில் 2015-16ஆம் ஆண்டில், மரவள்ளி 0.21 மில்லியன் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 4.8 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு, கேரளா, ஆந்திர பிரதேசம் மற்றும் நாகலாந்து ஆகியவை மரவள்ளி உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்களாகும்.

மரவள்ளியிலிருந்து பெறப்படும் பொருட்களான ஜவ்வரிசி உணவாகவும், மரவள்ளி மாவு பல்வேறு ஆலை உபயோகங்களிலும் பயன்படுத்தப்படுகின்றது. இந்தியாவிற்கு மிகப் பெரிய இறக்குமதியாளரான தாய்லாந்திலிருந்து USD 1.17 கோடி மதிப்பிலான மாற்றம் செய்யப்பட்ட மாவு (செப்டம்பர்'2015-செப்டம்பர்'2016) இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்தோனேஷியாவிலிருந்தும் மரவள்ளி மாவு இறக்குமதி செய்யப்படுகிறது. விசாகப்பட்டினம், நவசேவா மற்றும் சென்னை துறைமுகம் மரவள்ளி மாவை இறக்குமதி செய்யும் முக்கிய துறைமுகங்களாகும். வர்த்தக மூலங்களின் படி சேகோசர்வில், ஜவ்வரிசியின் தற்போதைய இருப்பு 2.5 லட்சம் மூட்டைகள் மற்றும் மரவள்ளி மாவின் இருப்பு 30,000 மூட்டைகளும் உள்ளன.

மரவள்ளி பயிரிடப்படும் முக்கிய மாநிலங்களில் சாதகமற்ற வானிலை காரணமாக உற்பத்தி குறைந்துள்ளது. மேலும் கடந்த பருவத்தில் அதிக உற்பத்தியினால் விலை வீழ்ச்சி ஏற்பட்டதால் விவசாயிகள் மிளகு, முந்திரி மற்றும் காய்கறி போன்ற பயிர்களுக்கு மாறியுள்ளனர். தமிழ்நாட்டில் வெள்ளை ஈ தாக்குதலாலும் சில இடங்களில்

உற்பத்தி குறைந்துள்ளது. எனவே, மரவள்ளிக்கு தேவை அதிகம் இருப்பதால் வரும் மாதங்களில் நல்ல விலை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 15 ஆண்டுகளாக சேலம் சந்தையில் நிலவிய மரவள்ளியின் விலையை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில், ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்பு திட்டம், சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் தரமான மரவள்ளியின் பண்ணை விலை அறுவடையின் போது டன்னிற்கு ரூ.9,000 – 10,000 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் விவசாயிகள் தங்கள் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.


<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி - 0422-2431405

<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்
காய்கறிப் பயிர்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-6611374, 0422- 6611283